ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,743 — 1959 මැයි 15 වැනි සිකුරාදා — 15.5.1959

11,743 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பீ· 114/50.

**1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் 4 (1) ம் பிரிவின் கீழுள்ள கட்டளை**

**கட்டளை இலக்கம் 124**

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் டொன் பிலிப் ரூபசிங்க குணவர்தன, விவசாய உணவு அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எச்செம்மறியாட்டையோ வெள்ளாட்டையோ எவ்வொருவரோ உணவு அதிகாரியால் வழங்கப்பட்ட உத்தரவுடனும் உத்தரவுக்கிணங்கியும் அல்லாது இலங்கைக்குள் இறக்குமதி செய்யக் கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

டீ. பீ. ஆர். குணவர்தன,
விவசாய உணவு அமைச்சர்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு மே மாதம் 7 ந் திகதி.

---

**1946 ம் ஆண்டின் இலங்கைப் பாராளுமன்றத் தெரிவு சம்பந்தமான இராசசபைச் சட்டம்**

1958 ம் ஆண்டின் வாக்காளர் இடாப்புகள் திருத்துதல்

21 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—மினிப்பே
22 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—வத்தேகம
23 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கடுகன்னுவ
24 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கண்டி
25 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கலஹா
26 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கம்பளை
31 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—நாவலப்பிட்டிய
32 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—மஸ்கெலிய

1946 ம் ஆண்டின் இலங்கைப் பாராளுமன்றத் தெரிவு சம்பந்தமான இராசசபைச் சட்டத்தின் 22 (1) ம் பிரிவின்படி மேலே குறித்த தெரிவுப் பகுதி இடாப்புகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றதெனவும் அவ்விடாப்புகளை தேர்தற் கந்தோர், கச்சேரி, கண்டியில் கந்தோர் நேரங்களில் இலவசமாக பார்வையிடலாமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. பி. எஸ். என். புள்ளெனுயகம்,

21 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—மினிப்பே
22 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—வத்தேகம
23 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கடுகன்னுவ
24 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கண்டி
25 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கலஹா
26 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—கம்பளை
31 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—நாவலப்பிட்டிய
32 ம் இலக்கத் தெரிவுப் பகுதி—மஸ்கெலிய

பதிவுக் காரியஸ்தர்.

தேர்தற் கந்தோர்,
கண்டி கச்சேரி,
1959 ம் ஆண்டு மே மாதம் 8 ந் திகதி.

---

**4 A ம் மாதிரிப்பத்திரம்**

**1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்**

**சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்**

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்துக்குள், பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறுக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும் பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி, யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடை கூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு வைகாசி மீ 12 ந் உ.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் |
|---|---|
| J 4990—20.5.51 | .. மருதமுத்து கறுப்பன், புளூம்பீல்ட் பிரிவு, பிறண்விக் கூட்டம், மஸ்க்கேலியா |
| J 5118—20.5.51 | .. மருதமுத்து இராமையா அல்லது கந்தையா, புளூம்பீல்ட் பிரிவு, பிறண்விக் கூட்டம், மஸ்க்கேலியா |
| R 4924—24.6.51 | .. பிரான்சிஸ் சுசானு, மாதிரிக் குடிசைகள், நூரளை |

### 4 B ம் மாதிரிப்பத்திரம்

### 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

### சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத் தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு வைகாசி மீ 12 ந் உ.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| J 2327—20.5.51 | .. ஐயாக்குட்டி சிவானு, கங்கைவத்தைத் தோட்டம், மஸ்க்கேலியா | கதிராயி (மனைவி), பேச்சாயி (மகள்), வேலாயி (மகள்), மருதை (மகன்), ஆறுமுகம் (மகன்) |
| J 2713—25.3.51 | .. சங்கப்பிள்ளை அண்ணுவி, பிறவுண்லோத் தோட்டம், மஸ்க்கேலியா | பச்சையம்மா (மகள்), பார்வதி (மகள்) |
| J 3504—3.7.51 | .. அருணசலம்பிள்ளை செட்டியாபிள்ளை, களனித் தோட்டம், மஸ்க்கேலியா | செல்லம்மா (மனைவி), தனபாக்கியம் அல்லது தைலம்மா (மகள்), புஷ்பம் அல்லது சிவபாக்கியம் (மகள்), சிவலிங்கம் அல்லது பொறவி (மகன்), சண்முகம் (மகன்), திரிகோணப்பெருமாள் (மகன்), தர்மலிங்கம் (மகன்) |
| J 4665—22.7.51 | .. இராமசாமி பெருமாள், களனித் தோட்டம், மஸ்க்கேலியா | பூவாயி (மனைவி), மாரியாயி அல்லது தங்கம்மா (மகள்), கிருஷ்ணன் (மகன்), செல்லம்மா (மகள்) இராமையா (மகன்), தர்மலிங்கம் (மகன்) |
| J 4678—22.7.51 | .. சின்னக்கவுண்டன் குழந்தை, களனித் தோட்டம், மஸ்க்கேலியா | பொன்னம்மா (மனைவி), சுப்பிரமணியம் (மகன்), சேதுராமன் (மகன்), இராசேசுவரி (மகள்) |
| J 4698—22.7.51 | .. சோலைமுத்து நாகு, களனித் தோட்டம், மஸ்க்கேலியா .. | அங்கம்மா (மனைவி), மருதமுத்து (மகன்), இரெங்கசாமி (மகன்). இராமாயி (மகள்), மருதை (மகன்), ஜெகதாம்பாள் (மகள்), தனலெட்சுமி (மகள்) |
| J 4710—22.7.51 | .. சின்னக்கறுப்பன் மெய்யன், களனி பிறேமார் தோட்டம், மஸ்க்கேலியா | வீராயி (மனைவி) |
| J 4932—8.7.51 | .. தங்கமுத்து செல்லையா, பிறண்விக் கூட்டம், மஸ்க்கேலியா | செல்லம்மா (மகள்), தங்கமுத்து (மகன்), இலெட்சுமி (மகள்), அமராவதி (மகள்), இரத்தினம்மா (மகள்) |
| J 5018—30.7.51 | .. சந்தணம் கைம்பெண் செல்லம்மா, புளும்பீல்ட் பிரிவு, பிறண்விக் கூட்டம், மஸ்க்கேலியா | பாப்பு அல்லது ஆராயி (மகள்), நைனு அல்லது நல்லதம்பி பிருசி (மகன்) |
| J 5580—29.7.51 | .. அண்ணுமலை பிச்சை, பெயர்லோன் தோட்டம், அப்கொட் .. | சிவனம்மாள் (மனைவி) |
| J 5828—24.2.51 | .. பெரமன் பழனியாண்டி, மவுண்ற்சியன் தோட்டம், வட்டவளை | பெரமாயி (மனைவி), பொன்னுச்சாமி அல்லது பெரமையா (மகன்), இராசேசுவரி (மகள்), தேவி (மகள்), தேவராசா (மகன்) |
| J 6117—22.7.51 | .. வீரமுத்து அழகன், மகானிலுத் தோட்டம், அப்கொட் .. | பழனியம்மா (மனைவி), வீரம்மா (மகள்), உண்ணுமலை (மகள்), சதாசிவம் (மகன்), இலெச்சுமன் (மகன்) |
| J 6279—22.7.51 | .. முத்துச்சாமிப்பிள்ளை கறுப்பையாபிள்ளை, மகானிலுத் தோட்டம், அப்கொட் | செல்லம்மா (மனைவி), மூக்கன் (மகன்) |
| J 6285—22.7.51 | .. அப்பாசாமி இராமசாமி, மகானிலுத் தோட்டம், அப்கொட். . | பாப்பாத்தி (மனைவி), மீனுட்சி (மகள்), சரோசா (மகள்) |
| J 6410—8.7.51 | .. பெரியசாமி கிட்ணன், மொறேப் பிரிவு, மொறேக் .. கூட்டம், மஸ்க்கேலியா | கண்ணியம்மாள் (மனைவி), சிவனுயி அல்லது முனியம்மா அல்லது கண்ணுயி (மகள்), கந்தசாமி அல்லது பெரியசாமி (மகன்), நல்லம்மா அல்லது தனபாக்கியம் (மகள்) |
| J 6730—29.7.51 | .. கறுப்பன் சண்ணுசி, கிங்கோரூப் பிரிவு, அல்ரன் கூட்டம், அப்கொட் | வள்ளியம்மை (மனைவி) |
| J 6876—29.7.51 | .. பழனியப்பன் சின்னக்கறுப்பன், அல்ரன் கூட்டம், அப்கொட் | நல்லம்மா (மனைவி), பழனி (மகன்), வனசுந்தரி (மகள்) |
| J 7008—30.7.51 | .. நல்லான் சோலை, கின்ரயர்த் தோட்டம், மஸ்க்கேலியா .. | பழனியம்மா (மனைவி), ஆவாலி அல்லது மீனம்மா (மகள்), விசாளாச்சி அல்லது விசுவலெச்சுமி (மகள்), சந்தரலிங்கம் (மகன்), விசுவநாதன் (மகன்) |
| J 7022—30.7.51 | .. பிச்சை அங்கமுத்து, கின்ரயர்த் தோட்டம், மஸ்க்கேலியா. . | பாப்பாத்தி (மனைவி) |
| J 7027—30.7.51 | .. இராமசாமி முத்துக்கிருஷ்ணன், கின்ரயர்த் தோட்டம், மஸ்க்கேலியா | பாப்பாத்தி (மனைவி), யானகி அல்லது ஞானதேசி (மகள்), செல்வத்துரை அல்லது சிலம்பரம் (மகன்), இராசகுமாரி (மகள்), புஷ்பராஜ் அல்லது சதாசிவம் (மகன்), இரஞ்சனி அல்லது இராசேசுவரி அல்லது இரக்கணை (மகள்), இராமச்சந்திரம் (மகன்) |
| J 7057—30.7.51 | .. கூத்தன் இராமசாமி, கின்ரயர்த் தோட்டம், மஸ்க்கேலியா | இருளாயி (மனைவி), பெரியசாமி (மகன்), அண்ணுமலை (மகன்), மலையப்பிள்ளை (மகன்), விசுவநாதன் (மகன்), தெய்வானை (மகள்), ஜெகநாதன் (மகன்) |
| J 7292—30.7.51 | .. உறுமன் பழனிமுத்து, மஸ்க்கேலியாத் தோட்டம், மஸ்க்கேலியா | ஒய்யாத்தாள் (மனைவி) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|---|
| J 7429—24.6.51 | .. | வெள்ளையன் நல்லு, இலங்காப் பிரிவு, கிளண்ரில்ற் கூட்டம், மஸ்க்கேலியா | செல்லம்மா (மனைவி), தனலெச்சுமி (மகள்) |
| J 7453—24.6.51 | .. | முத்து இராமன், இலங்காப் பிரிவு, கிளண்ரில்ட் கூட்டம், மஸ்க்கேலியா | சின்னப்பிள்ளை (மனைவி), முத்தம்மா (மகள்), சிவ பாக்கியம் (மகள்), காமாட்சி (மகள்), செல்லாயி (மகள்), வேலு (மகன்) |
| J 7470—24.6.51 | .. | தாத்தன் கிட்ணன், இலங்காப் பிரிவு, கிளண்ரில்ட் கூட்டம், மஸ்க்கேலியா | சின்னப்பெரியக்கா (மனைவி), தாத்தன் (மகன்), இரெங் கம்மா (மகள்), இராமாயி (மகள்), பாப்பாத்தி (மகள்), பெருமாள் (மகன்), இராமசாமி (மகன்), மாரியாயி (மகள்) |
| J 7598—30.7.51 | .. | நாகப்பன் மாரி, நயான்சாத் தோட்டம், மஸ்க்கேலியா .. | இராசம்மா (மனைவி), சவுந்தரம்மா (மகள்), நாகப்பன் (மகன்), இராமஜெயம் (மகன்), இராமச்சந்திரன் (மகன்), |
| J 7693—3.7.51 | .. | சின்னத்தம்பி கைம்பெண் செல்லம்மா, களனித் தோட்டம், மஸ்க்கேலியா | பெருமாள் (மகன்), சுப்பிரமணியம் (மகன்) |
| J 7695—3.7.51 | .. | இராமசாமி அவயன், களனித் தோட்டம், மஸ்க்கேலியா .. | கிட்ணம்மா (மனைவி) |
| J 7900—30.7.51 | .. | வயித்தி ஆறுமுகம், லுக்கோம்பைத் தோட்டம், மஸ்க் கேலியா | நாகம்மா (மனைவி), செல்வபாக்கியம் (மகள்), இலெச்சுமி (மகள்), பாலசுந்தரம் (மகன்), வனசுந்தரி (மகள்) |
| J 9414—19.7.51 | .. | ஐராதன் முத்துச்சாமி, நியூ வலித் தோட்டம், நோர்வூட் .. | தாயம்மா (மனைவி), வையாபுரி (மகன்), பெரியசாமி (மகன்), சுப்பிரம்ணியம் (மகன்), அருணுசலம் (மகன்) |
| P 4429—18.11.50 | .. | நாகமுத்து சின்னச்சாமி, கீழ்ப் பிரிவு, டிம்பிலேத் தோட்டம், கொட்டக்கலை | தங்கம்மாள் (மனைவி), முத்துக்கறுப்பாயி (மகள்), மாரி யம்மாள் அல்லது பாப்பாத்தி (மகள்), சுப்பிரமணியம் (மகன்), முத்துக்கறுப்பன் (மகன்) |
| J 9433—19.7.51 | .. | அச்சக்கவுண்டர் சிக்கன், நியூ வலித் தோட்டம், நோர்வூட் | பாப்பாத்தி (மனைவி), குமரன் (மகன்), ஆண்டிச்சி (மகள்), ஆண்டி (மகன்), சின்னச்சாமி (மகன்), மொட்டையக் கவுண்டன் (மகன்), வெள்ளாளக் கவுண்டன் (மகன்) |
| J 9469—19.7.51 | .. | காளிமுத்து குப்பு, நியூ வலித் தோட்டம், நோர்வூட் .. | வள்ளியம்மை (மனைவி), கறுப்பன் (மகன்), வேலு அல்லது தில்லையா (மகன்), கறுப்பையா (மகன்), இராசேசுவரி அல்லது இராசம்மா (மகள்), விவேகானந்தன் (மகன்) |
| J 9492—19.7.51 | .. | மூக்கன் சிவானு, நியூ வலித் தோட்டம், நோர்வூட் .. | சின்னம்மா (மனைவி) |
| J 9584—30.7.51 | .. | வீரன் நல்லான், குயின்லண்ட் தோட்டம், மஸ்க்கேலியா .. | இரெங்கம்மா (மனைவி), பெரியசாமி (மகன்), வீரம்மா அல்லது பாப்பாத்தி (மகள்), பெத்தாயி அல்லது செல்லம்மா (மகள்), தங்கையா (மகன்), இராமன் (மகன்), கிருஷ்ணன் (மகன்), ஜெயலெச்சுமி (மகள்) |
| R 3014—12.9.50 | .. | யாக்கோப்பு ஆரோக்கியம் பிலிப்பு, கந்தளலத் திட்டம், பிளாக்பூல், நுரலை | அந்தோனியம்மாள் (மனைவி) |
| V 4305—3.4.51 | .. | நாராயணசாமி கறுப்பையா, பழைய ஆலைப் பிரிவு, ஒப்ரன் கூட்டம், ஒப்ரன் | செல்லம்மா (மனைவி), இராசகோபால் (மகன்), லீலாவதி அல்லது தனபாக்கியம் (மகள்), பாலக்கிருஷ்ணன் (மகன்), தனலெட்சுமி அல்லது தங்கலெட்சுமி (மகள்), இலெட்சும நாராயணன் (மகன்) |
| J 9854—5.8.51 | .. | பொன்னையா இராமலிங்கம், கஸ்க்கிபென் தோட்டம், மஸ்க்கேலியா | கோவிந்தம்மா (மனைவி), ஜெயலெச்சுமி (மகள்), சரசுவதி (மகள்), விருத்தாசலம் (மகன்), கிருஷ்ணசாமி (மகன்) |
| J 9861—5.8.51 | .. | பழனி மாரப்பன், கஸ்க்கிபென் தோட்டம், மஸ்க்கேலியா .. | பெரிமாயி (மனைவி) |
| J 10659—15.5.51 | .. | கறுப்பன் வெள்ளைச்சாமி, கங்கைவத்தைத் தோட்டம், மஸ்க்கேலியா | பாஞ்சாலை (மனைவி), கதிரவேலு (மகன), மாரியாயி (மகள்) |

## விளம்பரம்

1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 21 ந் திகதி வியாழக்கிழமையும், 22 ந் திகதி வெள்ளிக் கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாதலால், இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 20 ந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப் பத்திரிகை யில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 16 ந் திகதி சனிக்கிழமை பி. ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஆண்டு வைகாசி (மே) மீ 5 ந் உ.

பேர்ணுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.